**நாவிதன்வெளி பிரதேச சபை,**
**அம்பாரை மாவட்டம்.**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2020 மார்ச் 02 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக் மற்றும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 2020 மே 29 ஆந் திகதி பிரதேச சபை தவிசாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து நாவிதன்வெளி பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் நிதிநிலைமையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதும் நியாயமானதுமான நிலையை தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | 2019 டிசம்பர் 31 இல் களஞ்சியத்தில் காணப்பட்டிருந்த 07 வகையான ரூபா 254,870 பெறுமதியுடைய மின்சாரப் பொருட்கள் நிதிக்கூற்றுக்களில் செலவுகளில் சேர்க்கப்பட்டிருந்தது. | நிதிக்கூற்றுக்களில் இருப்பாக காட்டப்படல் வேண்டும். | இனிவரும் காலங்களில் இறுதி இருப்பின் பெறுமதிகளை நிதிக்கூற்றில் காட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| (ii) | சபையிலுள்ள 10 வாகனங்களின் பெறுமதி மதிக்கப்பட்டு கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. | வாகனங்களின் பெறுமதி மதிக்கப்பட்டு கணக்குகளுக்கு கொண்டுவரப்படல் வேண்டும். | எதிர்வரும் காலங்களில் குறிப்பிட்ட பெறுமதிகளை கணக்குகளில் சேர்த்துக்கொள்ள கூடிய கவனம் செலுத்தப்படும். |

### 1.4 இணக்கமின்மைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) 1988 ஆம் ஆண்டின் | பி.ச - 46 இற்கமைய | விதிகளுக்கு | ஏதிர்வரும் காலத்தில் |

| | | | |
|---|---|---|---|
| பிரதேச சபைகள் நிதி, நிருவாக விதிகள் பிரிவு 217 மற்றும் 218 | காணிகள் கட்டிடங்கள் பதிவேடு பேணப்பட்டிருக்கவில்லை. மேலும், காணிகள் கட்டிடங்கள் சோதனை செய்யப்பட்டிருக்கவில்லை . | அமைவாக பின்பற்றப்படல் வேண்டும். | சொத்துக்களின் பெறுமதியினை மதிப்பீடு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு உரிய பதிவேட்டினை இற்றைப்படுத்தி மெய்மையாய்வு செய்ய கூடிய கவனம் செலுத்தப்படும். |
| (ஆ) 1993 நவம்பர் 18 ஆந் திகதிய 15 ஆம் இலக்க நகர அபிவிருத்தி அதிகார சபையின் சுற்றறிக்கை | சபையானது “நகர அபிவிருத்தி” எனும் பெயரில் வங்கிக் கணக்கொன்றை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. | சுற்றறிக்கைக்கு அமைவாக வங்கிக் கணக்கொன்றை ஆரம்பித்து நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | குறிப்பிட்ட அதிகார சபை சார்பான செயற்பாடுகள் ஆரம்பிக்கப்படும்போது நகர அபிவிருத்தி சார்பான வங்கி கணக்கு ஆரம்பிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 3,628,514 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 1,684,198 தொகையாக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளுக்குரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான மூலம் | 2019 | | | | 2018 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மதிப்பிடப் பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவைகள் | மதிப்பிடப் பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | சேகரிக்கப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் மொத்த நிலுவைகள் |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | -- | -- | -- | -- | -- | -- | -- | -- |
| வாடகைகள் | 2,470,000 | 2,186,666 | 2,230,896 | 1,224,918 | 2,944,500 | 2,819,504 | 3,061,139 | 1,269,148 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 500,000 | 500,950 | 500,950 | -- | 485,000 | 448,100 | 448,100 | -- |
| ஏனைய வருமானம் | 6,232,500 | 7,714,721 | 8,701,512 | 48,821 | 6,987,500 | 4,456,400 | 5,092,144 | 1,035,611 |
| | 9,202,500 | 10,402,337 | 11,433,358 | 1,273,739 | 10,417,000 | 7,724,004 | 8,601,383 | 2,304,759 |

### 2.2.3 இறைச்சிக் கடைக் குத்தகை நிலுவை

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2007 தொடக்கம் 2019 வரையான காலப்பகுதியில் அறவிடப்படவேண்டிய ரூபா 1,163,147 தொகையான இறைச்சிக் கடைக் குத்தகை நிலுவை அறவிடப்பட்டிருக்க வில்லை. | கடந்த வருட நிலுவைகளுடன் மீளாய்வாண்டுக்கான குத்தகை வருமானத்தினையும் அறவிட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | மத்தியஸ்தர் சபையால் குத்தகைக்காரர்கள் விசாரணைக்காக அழைக்கப்பட்டு அவர்களுடன் ஏற்படுத்திக்கொண்ட இணக்கப்பாட்டிற்கமைவாக 2019 ஜனவரி மாதம் தொடக்கம் சிறு தொகையாக தவணை அடிப்படையில் தற்போது செலுத்திவருகின்றனர். |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம், பொது மக்கள் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பகிரங்க பொது வழிகள், மற்றும் மக்களின் சுகம், வசதி மற்றும் நலன்புரி தொடர்பான கருமங்கள் சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருக்கும் பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு

### (அ) கைவிடப்பட்ட செயற்பாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| அரச சார்பற்ற நிறுவனத்தால் நிர்மாணிக்கப்பட்டு பிரதேச சபையிடம் 2010 ஆம் ஆண்டில் ஒப்படைக்கப்பட்ட ரூபா 3 மில்லியன் பெறுமதியான திண்மக் கழிவகற்றல் நிலையமானது உரிய சாத்திய வள ஆய்வினை மேற்கொள்ளாது கோயிலுக்கு அருகாமையில் அமையக்கப்பட்டமையால், பொதுமக்களின் எதிர்ப்புக் காரணமாக இன்று வரை செயற்படாது விளைவற்றுக் காணப்பட்டிருந்தது. மேலும் இந் நிலையத்தை சுற்றி அமைக்கப்பட்டிருந்த சுற்றுவேலி மற்றும் புதிதாக இணைக்கப்பட்ட மின்சார இணைப்புப் பொருத்துக்களும் களவாடப்பட்டிருந்தது. | உரிய சாத்திய வள ஆய்வின் பின்னர் திட்டம் நடைமுறைப் படுத்தப்படல் வேண்டும். ஆத்துடன் குறித்த நிலையத்தினை பயன்படுத்துவதற்கு தொடர் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | இது தொடர்பான தொடர் நடவடிக்கை எடுக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது. |

**(ஆ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (i) | சபையினால் நிலைபேறான அபிவிருத்தி தொடர்பாக அளவிடுவதற்கான குறிகாட்டிகளை உருவாக்க நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இலக்குகளை அளவிடுவதற்கான குறிகாட்டிகளை உருவாக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | எதிர்காலத்தில் கூடுதலான வருமானங்களை ஈட்டிக்கொள்வதற்கான வரைபுகளை எமது சபையின் ஊடாக மேற்கொண்டு கூடுதலான அபிவிருத்தி இலக்குகளையும் அடையவும் எண்ணியுள்ளதுடன், அதற்கான ஒரு பொதுவான அளவீட்டுக்குறிகாட்டியினை உருவாக்குவதற்கான நடவடிக்கையும் எடுக்கப்படும் என்பதனையும் அறியத்தருகின்றேன். |
| (ii) | 2017, 2018 மற்றும் மீளாய்வாண்டு ஆண்டுகளுக்கான நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்களை அண்மிப்பதற்கு தேவையான நிதி ஒதுக்கீடு சபையினால் இனங்காணப்பட்டிருக்கவில்லை. | குறித்த செயல்திட்டத்தை நிறைவேற்ற நிதியேற்பாடுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். | |

**3.2 மனிதவள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சபையில் 03 வகையான பதவிகளுக்கு 04 பதவி வெற்றிடங்கள் காணப்பட்டிருந்தது. | வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | சபையில் தங்களால் சுட்டிக்காட்டப்பட்ட 03 வகையான பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கான தொடர்நடவடிக்கையானது மேற்கொள்ளப்பட்டுள்ளது. |
| (ஆ) | 2001 ஆம் ஆண்டிற்கு முன்னர் இடமாற்றம் பெற்றுச் சென்ற மற்றும் ஓய்வுபெற்ற உத்தியோகத்தர்களின் கடன் நிலுவை ரூபா 42,669 தொகையினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | குறித்த நிலுவைகளை உரிய நபர்களிடமிருந்து அறவிடுவதற்கோ அல்லது கணக்குகளில் இருந்து சட்டப்படி பதிவழிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும். | உள்ளூராட்சி ஆணையாளர் அவர்களுக்கு அறிவித்து அடுத்த கட்ட நடவடிக்கை தொடர்பாக ஆலோசனை பெறப்பட்டு நடவடிக்கை எடுப்பதற்குள்ளோம். |

**3.3 சொத்துக்கள் முகாமைத்துவம்**

**3.3.1 சொத்துக்களை பதிவேட்டிற்கு உட்படுத்தப்படாமை**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதிவரை சபைக்கு சொந்தமான காணிகள் மற்றும் கட்டிடங்களின் மொத்தப் பெறுமதி ரூபா 172,066,147 தொகையாக கணக்குகளில் காட்டப்பட்ட போதிலும், அசையும் மற்றும் அசையா சொத்துக்களை நிலையான சொத்துப் பதிவேடுகளில் பதிவதற்கு சபையால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | நிலையான சொத்துப் பதிவேடுகளில் பதிவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | ஏதிர்வரும் காலத்தில் சொத்துக்களின் பெறுமதியினை மதிப்பீடு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு உரிய பதிவேட்டினை இற்றைப்படுத்தி மெய்மையாய்வு செய்ய கூடிய கவனம் செலுத்தப்படும். |

**3.3.2 வாகனங்களின் பயன்பாடு**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| புாவனைக்கு எடுக்கமுடியாத Mahendra வாகனம் 2012 டிசம்பர் இலிருந்து திருத்துவதற்கு அல்லது ஏலத்தில் விற்க நடவடிக்கை எடுக்கப்படாது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது. | அகற்றுவதற்கான அல்லது திருத்தி மீளப் பயன்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | பிரதிப் பிரதம செயலாளர்(பொறியியல் சேவை) – கி.மா ஊடாக அகற்றுவதற்கு (Disposal) நடவடிக்கை மேற்காள்ளப்பட்ட போதும் நீதி மன்ற நடவடிக்கையில் இருப்பதனால் அதனை தற்போது செய்யமுடியாத நிலைமை காணப்படுகின்றது. இருப்பினும் நிதிமன்ற நடவடிக்கையின் பின்னர் குறித்த வாகனத்தினை சபையின் வருமான நிலைமையினைக்கருத்தில் கொண்டு திருத்துவதற்கான அல்லது அகற்றுவதற்கான நடவடிக்கையானது எம்மால் மேற்கொள்ளயப்படும். |